அவை என்ன நிலைக்காவது? அமைச்சர் அவர்கள் இஷ்டப் பட்டால் சொல்லலாம், அவர்கள் விருப்பம் இல்லாவிட்டால சொல்லமாட்டார்கள்.

(திரு. நா. சுந்தரராஜ் எழுந்தார்.)

உட்காருங்கள். 'ஐ ஆம் ஸாரி.' உட்காருங்கள்.

'டான்சி' நிறுவனத்திடமிருந்து பொருட்கள் வாங்கல்.

*வினா 17—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு நிறுவனங்களும் தங்கள் தேவைகளுக்கு டான்சி நிறுவனத்திலேயே பொருள் களை வாங்க வேண்டுமென அரசு உத்தரவிடுமா?

(ஆ) அரசு நிறுவனமான டான்சியில் தேவையானவற்றை வாங்காமல் சில அதிகாரிகள் தனியார் நிறுவனங்களிடம் வாங்க முனைவதை தடுத்து நிறுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) அரசுத் துறைகளுக்குத் தேவையான மரச் சாமான்கள் போன்ற பொருட்களை ஒன்பது நிறுவனங்களிடமிருந்துதான் வாங்க வேண்டுமென அரசு ஏற்கனவே உத்திரவிட்டுள்ளது. இந்த ஒன்பது நிறுவனங்களில் "டான்சி" மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

(ஆ) அரசின் கவனத்திற்கு ஆதாரத்துடன் கொண்டுவந் தால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. மு. அம்பிகாபதி: சில அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனங்கள் 'டான்சி' போன்ற நிறுவனங்களில் வாங்காமல் தனியார்களிடம் வாங்குவதாக என்னிடம் தகவல்கள் உள்ளன. அதை வேண்டுமென்றால் அமைச்சர் அவர்களிடம் தரத் தயாராயிருக்கிறேன். அவற்றின் மீது நடவடிக்கைகள் எடுக்க முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: நான் விடையி லேயே சொல்லியிருக்கிறேன். அரசின் கவனத்திற்கு ஆதாரத் துடன் கொண்டுவந்தால் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற மன்றங்களில் பீரோக்கள், மேஜைகள் போன்ற பொருட்களை வாங்க வேண்டுமென்றால் தனியார்களிடம் ஒப்பந்தம் செய்துகொள்கிறார்கள். டான்சி

1978 ஆகஸ்ட் 31]

போன்ற நிறுவனங்களிடம் வாங்க ஒப்பந்தம் செய்யும்போது தவணை முறையில் பொருட்களைக் கொடுத்தால் மேலும் அவற்றை அங்கிருந்து வாங்குவதற்கு வழி ஏற்படும். எனவே தவணை முறையில் பொருட்களைக் கொடுக்க அரசு ஆணை யிடுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: அரசுத் துறை களுக்குத் தேவையான மரச்சாமான்கள் என்று குறிப்பிடும் போது மாநகராட்சிகள், பஞ்சாயத்து யூனியன்கள் எல்லாம் அதில் அடங்குகின்றன. அரசு, ஒன்பது நிறுவனங்களிடம் வாங்க வேண்டுமென்று ஏற்கனவே உத்தரவிட்டிருக்கிறது. இந்த ஒன்பது நிறுவனங்கள் தவிர வேறு தனியார் நிறுவனங்களிடம் வாங்க வழி இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-00]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தை இன் னும் சற்று நேரத்திற்கு நீட்டிக்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிறுவனங்களுக்குத் தேவையான சாமான்களைத் தனியார் துறையிலிருந்தும் வாங்கலாம் என்று சொல்லும்போது, பொதுத் துறை 3-வது இடமாகத்தான் வைக்கப்பட்டு சாமான்கள் வாங்கப்பட்டு வருவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் தனியார் நிறுவனங்கள் எது எது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் என்னுடைய விடையைத் தவறாக புரிந்து இருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அரசின் ஆதரவோடு நடை பெறுகின்ற நிறுவனங்களிலிருந்துதான் சாமான்கள் வாங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. தகவலுக் காகச் சொல்லுகிறேன், இதில் சேர்க்கப்பட்டிருக்கின்ற நிறு வனங்கள், சிறைச்சாலையில் செய்யப்படுகின்ற பொருட்களை விற்பனை செய்யும் நிலையங்கள், பாஸ்டல் பள்ளி நிறுவனங்கள், நவீனப் பயிற்சி உற்பத்திசாலை, தொழில் நுணுக்கப்பள்ளி, தொழில் நுணுக்கப்பயிற்சி நிலையங்கள், ஊனமுற்றோர் பயிற்சி பெறும் நிறுவனங்கள், தொழில் வணிக இயக்குநரின் அனுமதி யோடு நடைபெறும் தொழில் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனங்கள். கிராமத் தொழில் வளர்ச்சி நிலையத்தைச் சேர்ந்த நிறுவனங்கள், சிறைக் கைதிகளாக இருந்து விடுதலை பெற்றவர்கள் அமைத் திருக்கும் நிறுவனங்கள், என்று சொல்லப்படுகின்ற இப்படிப் பட்ட நிறுவனங்களிடமிருந்துதான் சாமான்கள் வாங்க வேண் டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது. தனியார் நிறுவனங் களிடமிருந்து எதையும் நாம் வாங்குவதில்லை.

[1978 ஆகஸ்ட் 31

திரு. துரை முத்துசாமி: டான்சி நிறுவனம் லாபத்தில் நடைபெறுகிறதா? நஷ்டத்தில் நடைபெறுகிறதா? இந் நிறுவனம் மிகுந்த நஷ்டத்தில் நடைபெற்றுவருவதாகவும், இதி லுள்ள பொருட்களின் விலை மிக அதிகமாக இருப்பதாகவும் சொல்லப்படுவது உண்மையா?

மாண்புமிகு கே. திரு. இராஜா முகமது: மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் தகுந்த விளக்கம் தரப்படும்.

திரு. கே. பண்ணை சேதுராம்: நான் கேட்ட கேள்வி, தவணை முறையில் பொருட்களைக் கொடுப்பதற்கு உத்தரவிடப் படுமா என்பது. அதற்கான பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: இதன் மூலக்கேள்வி அரசு நிறுவனங்கள் டான்சியிலிருந்து பொருட்கள் வாங்குவது பற்றி. தவணை முறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் தரலாம்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: தலைவர் அவர்களே, டான்சியில் தயாராகும் மரச் சாமான்கள் பற்றித்தான் இங்கு சொல்லப்பட்டது. இதைத் தவிர மற்ற சாமான்கள் ஏதாவது இருக்கின்றனவா? அதைப்பற்றிய விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: டான்சியில் 58 நிறுவனங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு நிறுவனமும் பயிற்சிப் பணி மையமாகவும் பணி மையமாகவும் உற்பத்தியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. இது குறித்து விளக்கமான அறிக்கை தர வேண்டும் என்றால், அல்லது குறிப்பிட்ட இன்ன பொருளைப்பற்றி விவரம் வேண்டும் என்று தனிக் கேள்விப் போட் டால் அதற்கான பதிலைத் தருகிறேன்.

சென்னை அயன்புரம் பால்வள நிறுவனம்.

*வினா 18—திரு. ஆர். சண்முகம்: மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னை, அயன்புரம் பால்வள நிறுவனத்தை அரசே ஏற்று நடத்த உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) அரசு நேரிடையாக ஏற்று நடத்த உத்தேசமில்லை. ஆனால் அரசுக்குச் சொந்தமான பால்வள நிறுவனம், அயனாவரம் கூட்டுறவு பால் வழங்கும் ஒன்றியத்திற்குச் சொந்தமான கட்டடங்